[1995 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 305, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

305—

சிவகாசியில் உப மின்நிலையம் அமைத்தல்

***22016—**திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் மேலும் கூடுதலாக மின்சார வாரியத்தின் மூலம் ஒரு உப மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை திருத்தங்கலில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : தற்போது சிவகாசி நகருக்கு, சிவகாசி 33/11 கிலோவோல்ட் மின்நிலையத்திலிருந்தும், பாறைப்பட்டி 110/33/11 கிலோ வோல்ட் மின்நிலையத்திலிருந்தும் மின்சாரம் வழங்கப்படுகிறது. சிவகாசி நகரின் எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு புதிய 33/11 கிலோ வோல்ட் மின்நிலையம் சிவகாசி நகரில் அமைக்க பணி துவங்கப்பட்டு, 5 M.V.A. 33/11 கிலோ வோல்ட் மின்மாற்றியினை 19-3-95 அன்று இயக்கி வைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளுங்கள் கொடுக்கப்படும் என்று, கேட்டவுடனேயே சிவகாசிக்கு கூடுதலாக ஒரு உப மின்நிலையம் அளித்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், உடனேயே அனுமதி அளித்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். ட்வின் சிட்டி என்று பெயர் எடுத்துக் கொண்டிருக்கிற சிவகாசி மற்றும் திருத்தங்கல் ஆகிய இரண்டு நகரங்களும் சேர்ந்து இன்றையதினம் ஒரே நகரமாக மாறிக் கொண்டு வருகிறது. திருத்தங்கலைப் பொறுத்தமட்டில் அங்கே லோ-வோல்டேஜ் நிலவி வருவதன் காரணமாகத்தான் திருத்தங்கலுக்கு என்று தனியாக ஒரு உப மின்நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 17]

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருத்தங்கல் பகுதியில் சிவகாசி 33/11 கிலோ வோல்ட் உப மின்நிலையத்திலிருந்து 11 கிலோ வோல்ட் தொழிற்சாலை மின்பாதை மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. திருத்தங்கல் பகுதியின் மின் தேவை இந்த உப மின்நிலையத்தின் மூலம் பூர்த்தி செய்ய இயலும். மேலும் 11 கிலோ வோல்ட் தொழிற்சாலை மின் பாதையில் மின் அழுத்தம் திருப்திகரமாக இருக்கிறது. எனவே, திருத்தங்கலில் உப மின்நிலையம் அமைக்கும் தேவை இல்லையென்றே அரசு கருதுகிறது.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திடீரென்று கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்குள்ளாக எண்ணற்ற பிரிண்டிங் தொழிற்சாலைகள் திருத்தங்கல் பகுதியில் ஏற்பட்டு இருக்கின்றன. இன்னும் முடிவடையும் தருவாயில் கிட்டத்தட்ட 20-க்கும் அதிகமான பிரிண்டிங் தொழிற்சாலைகள் திருத்தங்கல் பகுதியில், எக்ஸ்டன்ஷன் ஏரியா என்று சொல்லப்படுகிற அந்த ஏரியாவில் அண்டர்-கன்ஸ்ட்ரக்ஷனில் இருக்கின்றன. அதையும் மனதில் வைத்துக்கொண்டு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, இன்னும் கூடுதலாக ஒரு உப மின்நிலையம் எப்படியாவது, அடுத்த நிதியாண்டிலாவது, அளிக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் சிவகாசி நகரம் என்பது தொழில் வளர்ச்சியில் மிகுந்து இருக்கிற நகரம் என்பதை அரசு நன்றாக அறியும். ஆகவே தான் ஏற்கனவே சிவகாசி நகரில் கேட்டவுடன் அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டன. அது தவிர, இந்த சிவகாசியை ஒட்டியிருக்கிற திருத்தங்கல் பகுதியில் இருக்கிற தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக தான் ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல மின்சார விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், புதிய தொழில்கள் வருகிறபோது அந்தப் பகுதியின் தேவையைக் கருதி தான் இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 100 துணை மின்நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியினுடைய நிலையை ஆய்வு செய்து, அங்கேயிருக்கிற அந்தத் தேவைக்கு ஏற்ப, திருத்தங்கல் நகரில் இதுபோன்ற ஒரு உப மின்நிலையத்தை அமைக்க வேண்டிய சாத்தியக்கூறுகள்

உள்ளதா என்பதை அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி, ஸ்தல அதிகாரிகளை அந்த இடத்தைப் பார்வையிடச் செய்து, அந்தப் பகுதியில் ஒரு முழுமையான அறிக்கையைப் பெற்று, தமிழ்நாடு மின்சார வாரியம் மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 306, திரு. *சஞ்சய் ராமசாமி,* இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

306—

முத்துராமன்பட்டியில் மேம்பாலம் கட்டுதல்

***35631**—*திரு. சஞ்சய் ராமசாமி :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர்-முத்துராமன்பட்டி இருப்புப் பாதை சந்திக் கடவில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலம் கட்டும் பணி தென்னக இரயில்வேயில் 1995-96 ஆம் ஆண்டு மூலத் திட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பாலம் அமைக்கும் சாலையில் நேர்பாடு குறித்து நெடுஞ்சாலைத் துறை மற்றும் இரயில்வே துறை பொறியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்குப் பின், முறைப்படி பணிகள் துவக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிவகாசிக்கு வருகை தரும்போது அந்தப் பகுதியிலுள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் ராமசாமி முதற்கொண்டு, காமராசர் மாவட்டத்தில் உள்ள எல்லா எம்.எல்.ஏ.-க்களும், பொது மக்களும் அந்தப் பகுதியில் காமராசர்